பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

27 08 2026 6 45

வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தேசிய விளையாட்டு தினத்தை ஒட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி, நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள இளைஞர்களுடன் இன்று காணொலி வாயிலாக கலந்துரையாட உள்ளார்.

2. அதிக ரயில் போக்குவரத்து உள்ள வழித்தடங்களை நான்கு வழிப் பாதைகளாக மாற்ற ரயில்வே திட்டமிட்டுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

3. நேபாளத்தில் வெள்ளப்பெருக்கில் காணாமல்போன தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களை பாதுகாப்பாக மீட்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக முதலமைச்சர் திரு. விஜய் தெரிவித்துள்ளார்.

4. மேட்டூர் அணையில் இருந்து அடுத்த மாதம் ஒன்றாம் தேதி முதல் தண்ணீர் திறந்துவிடப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

5. தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் இரண்டாவது தகுதிச் சுற்று ஆட்டத்தில் கோவை அணி 84 ரன் வித்தியாசத்தில் திருச்சி அணியை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

------------

தேசிய விளையாட்டு தினத்தை ஒட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி, நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள இளைஞர்களுடன் இன்று காணொலி வாயிலாக கலந்துரையாட உள்ளார்.

மை பாரத் அமைப்பு இதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளது.

இதற்காக மாநிலங்கள் மற்றும் யூனியன்பிரதேசங்களின் ஒவ்வொரு மாவட்டத்திலும் இரண்டு கல்லூரிகள் தேர்வு செய்யப்பட்டு, மாணவர்கள் இந்த கலந்துரையாடலில் பங்கேற்கின்றனர்.

விளையாட்டு, தலைமைப் பண்பு, அரசியல் பொறுப்புணர்வு, தன்னார்வ பணிகள், உடல் ஆரோக்கியம் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் இளைஞர்களுடன் பிரதமர் தமது கருத்துக்களை பகிர்ந்துகொள்ள உள்ளார்.

விளையாட்டு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சாதனை படைத்துள்ள இளைஞர்களும் பிரதமர் உடனான இந்த கலந்துரையாடலில் பங்கேற்கின்றனர்.

------------

அதிக ரயில் போக்குவரத்து உள்ள வழித்தடங்களை நான்கு வழிப் பாதைகளாக மாற்ற ரயில்வே திட்டமிட்டுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

சென்னை - ஹவுரா, சென்னை - மும்பை, சென்னை - தில்லி உள்ளிட்ட 7 முக்கியமான வழித்தடங்கள் இதற்காக அடையாளம் காணப்பட்டுள்ளதாக சமூக வலைதளத்தில் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த வழித்தடங்கள் 11 ஆயிரம் கிலோ மீட்டர் நீளம் கொண்டது என்றும், நாட்டின் மொத்த ரயில் போக்குவரத்தில் பெரும்பகுதி இந்த வழித்தடம் வழியாக நடைபெறுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வழித்தடங்களை நான்கு பாதைகளாக மாற்றுவதன் மூலம் அதிகரித்து வரும் ரயில் போக்குவரத்தை திறமையாக கையாள முடியும் என்றும், ரயில்களின் இயக்கத்தை மேலும் மேம்படுத்த முடியும் என்றும் ரயில்வே அமைச்சர் தெரிவித்துள்ளார்.

------------

நேபாளத்தில் திடீரென ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் காணாமல்போன தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களை பாதுகாப்பாக மீட்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக முதலமைச்சர் திரு. விஜய் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து வரும் செய்திகளை அறிந்து தாம் அதிர்ச்சியும், துயரமும் அடைந்துள்ளதாக சமூக வலைதளத்தில் அவர் பதிவிட்டுள்ளார்.

இந்தப் பேரிடரில் காணாமல்போன தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களை விரைந்து மீட்டு, அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்க அனைத்து நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு புதுதில்லியில் உள்ள தமிழ்நாடு அரசு இல்ல உயர் அதிகாரிகளுக்கு தாம் உத்தரவிட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

நேபாளத்தில் சிக்கியுள்ள தமிழர்களுக்கு உதவி தேவைப்படும் நிலையில் அவர்களோ, மாநிலத்தில் உள்ள அவர்களது உறவினர்களோ தொடர்புகொள்ள தமிழக அரசு அவசர தொலைபேசி எண்களை அறிவித்துள்ளதாகவும் முதல்வர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் வெளியுறவுத்துறை அமைச்சகம் நேபாளத்தில் உள்ள இந்திய தூதரகத்தின் உதவியுடன் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் குறித்த தகவல்களைப் பெற்று அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

நேபாளத்திற்கு சுற்றுலா சென்ற கும்பகோணத்தைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகளை மீட்க மத்திய-மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்களது உறவினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

அனைவரையும் பாதுகாப்பாக மீட்டு தமிழகத்திற்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்குமாறும் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இந்நிலையில் திமுக தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் விடுத்துள்ள அறிக்கையில், மத்திய அரசும், மாநில அரசும் விரைந்து செயல்பட்டு தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களை மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

நேபாள அரசுடன் இணைந்து மத்திய அரசு மீட்புப் பணிகளை துரிதப்படுத்த வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கேட்டுக்கொண்டுள்ளார்.

பெருவெள்ளத்தில் 60 தமிழர்கள் உட்பட 400க்கும் மேற்பட்ட இந்தியர்கள் காணாமல்போனதாக வெளியாகியுள்ள செய்தி வேதனையளிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

------------

மேட்டூர் அணையில் இருந்து அடுத்த மாதம் ஒன்றாம் தேதி முதல் தண்ணீர் திறந்துவிடப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

டெல்டா பாசனத்திற்காக அணையில் இருந்து முதலமைச்சர் திரு. விஜய், தண்ணீரை திறந்துவிட உள்ளதாக நீர்வளத்துறை அமைச்சர் திரு. ஆனந்த் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில், அணையின் நீர் இருப்பைப் பொறுத்து 45 நாட்களுக்கு தண்ணீரை திறந்துவிட மாநில அரசு முடிவு செய்துள்ளதாக கூறியுள்ளார்.

இந்நிலையில் காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழு, காவரி நீர் மேலாண்மை ஆணையம் மற்றும் உச்சநீதிமன்றத்தை அணுகி தமிழ்நாட்டிற்கு கிடைக்க வேண்டிய தண்ணீரைப் பெறுவதற்கு மாநில அரசு தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தண்ணீர் திறந்துவிடப்பட உள்ளதால் குறுகிய கால மற்றும் நடுத்தர கால நெல் ரகங்களைப் பயிரிட விவசாயிகளுக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குமாறு வேளாண்துறையினர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் திரு. ஆனந்த் கூறியுள்ளார்.

------------

மாநில மனித உரிமைகள் ஆணையத்திற்கு இரண்டு உறுப்பினர்களை நியமனம் செய்து தமிழக அரசு அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

ஓய்வுபெற்ற நீதிபதி டாக்டர் ஆர்.என். மஞ்சுளா மற்றும் ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி திருமதி சுகந்தி ஆகியோர் மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இப்பணியில் அவர்கள் பொறுப்பேற்கும் நாளில் இருந்து மூன்று ஆண்டுகளுக்கு இப்பதவியை அவர்கள் வகிப்பார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

------------

*இருவரிச் செய்திகள்*

ஈரானில் அமெரிக்கா நடத்திய தாக்குதலில் அந்நாட்டின் உயர் தலைவர் Mojtaba Khamenei படுகாயமடைந்துள்ளதாக அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

------------

இந்தியா - ஐரோப்பிய யூனியன் இடையே வர்த்தகம், முதலீடு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் உறவுகள் வலுவடைந்துள்ளதாக இந்தியாவுக்கான ஐரோப்பிய யூனியன் தூதர் Herve Delphin கூறியுள்ளார்.

------------

இந்தியாவிற்குள் சட்டவிரோதமாக நுழைந்ததாக திரிபுராவில் பங்களாதேஷ் நாட்டைச் சேர்ந்த 4 பேரை காவல்துறையினர் கைது செய்தனர்.

------------

தலைமைத் தேர்தல் ஆணையருடன் மாணவர்கள் மற்றும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் கலந்துரையாடும் நிகழ்ச்சி சென்னையில் இன்று நடைபெற உள்ளது.

------------

குண்டர் சட்டம் மற்றும் தேசிய பாதுகாப்புச் சட்டங்களின் கீழ் சிறையில் அடைத்து பிறப்பிக்கப்படும் உத்தரவுகளை ஆய்வு செய்வதற்காக அறிவுரைக் கழகத்தை மாற்றியமைத்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

------------

முதலமைச்சர் காப்பீட்டு திட்டத்திற்கான தொகை உயர்த்தப்பட்டுள்ளதால் ஏற்கனவே உள்ள காப்பீட்டு அட்டைகளையே பயனாளிகள் பயன்படுத்தி சிகிச்சை பெறலாம் என்று மாநில அரசு கூறியுள்ளது.

------------

சென்னை மாநகராட்சியில் முதற்கட்டமாக 10 ஆயிரம் வீடுகளில் குப்பைகளை தரம் பிரிக்கும் பணி தொடங்கியுள்ளதாக மாநகராட்சி ஆணையர் திரு. சமீரன் தெரிவித்துள்ளார்.

------------

வடகிழக்குப் பருவமழையை முன்னிட்டு சென்னை மாநகராட்சியில் மண்டல வாரியாக 15 ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை மாநில அரசு நியமித்துள்ளது.

------------

தமிழகத்தில் மேற்குத்தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இன்று இடி மின்னலுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி, திருச்சி, அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்களிலும், டெல்டா மாவட்டங்களிலும் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மாநிலத்தின் பிற பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்யக்கூடும் என்றும் வானிலை மையம் கூறியுள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், மாலை மற்றும் இரவு நேரங்களில் நகரின் ஒருசில பகுதிகளில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

------------

*விளையாட்டுச் செய்திகள்*

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது தகுதிச் சுற்று ஆட்டத்தில் கோவை அணி 84 ரன் வித்தியாசத்தில் திருச்சி அணியை வென்றது.

சென்னையில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் விளையாடிய கோவை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 183 ரன் எடுத்தது.

184 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய திருச்சி அணி 15 புள்ளி 4 ஓவரில் 99 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

-----------

Budapest ஓப்பன் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் வேலவன் செந்தில்குமார் மற்றும் Veer Chotrani அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

நேற்று நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் வேலவன் செந்தில் குமார், 11-2, 11-9, 11-8 என்ற செட் கணக்கில் மலேசியாவின் Eain Yow Ng-ஐ வென்றார்.

மற்றொரு காலிறுதிக்கு ஆட்டத்தில் Veer Chotrani, 14-12, 12-14, 11-6, 11-8 என்ற செட் கணக்கில் எகிப்தின் Mohamed Elsherbini-ஐ வென்றார்.

இன்று நடைபெறும் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் வேலவன் செந்தில் குமார், சகநாட்டைச் சேர்ந்த Veer Chotrani-ஐ எதிர்கொள்கிறார்.

--------------

இலங்கைக்கு எதிரான இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வலுவான நிலையில் உள்ளது.

கொழும்பில் நடைபெற்று வரும் இப்போட்டியின் நான்காம் நாளான நேற்று, இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்து ஆடிய இலங்கை அணி, 290 ரன்னுக்கு ஆட்டமிழந்து, ஃபாலோஆனை பெற்றது.

அதிகபட்சமாக Sonal Dinusha 103 ரன் எடுத்தார்.

Prasidh Krishna மற்றும் Manav Suthar அபாரமாக பந்துவீசி தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

பின்னர் இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்து ஆடிய இலங்கை அணி, 6 விக்கெட் இழப்புக்கு 229 ரன் எடுத்திருந்த நிலையில், மழை குறுக்கிட்டதன் காரணமாக நேற்றைய ஆட்டம் முன்கூட்டியே முடித்துக் கொள்ளப்பட்டது.

இந்தியா முதல் இன்னிங்ஸில் 9 விக்கெட் இழப்புக்கு 503 ரன் எடுத்திருந்த நிலையில் ஆட்டத்தை முடித்துக் கொண்டது.

<<<<The End>>>>